# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 205/மா/2024

**நாள்: 19.09.2025**

| | | |
|---|---|---|
| திரு. கோ. கோவிந்தராஜ்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| (1) மாவட்ட வருவாய் அலுவலர் /<br>மண்டல அலுவலர்,<br>மண்டலம்–12 ,<br>பெருநகர சென்னை மாநகராட்சி.<br><br>(2) உரிமையாளர்,<br>சுக்குபாய் புட்ஸ் பிரைவேட்<br>லிமிடெட், சென்னை–16. | --- | எதிர்மனுதாரர்கள் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 14.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2024 அன்று பெறப்பட்டு 205/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 14.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 12 எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2018–ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை வருவாய் துறை அதிகாரிகள் எத்தனை புதிய ஒட்டல்கள் துவங்க Licence-கள் வழங்கப்பட்டது. ஒட்டல் உரிமையாளர்கள் போக்குவரத்து காவல் துறையிடம் பெறப்பட்ட NOC-கள் சான்றிட்ட நகல்கள் கேட்டு கடந்த 11.03.2024 அன்று அளிக்கப்பட்ட RTI மனு 60 நாட்களுக்கு மேலாகியும் பதில் அளிக்காததால் கடந்த 13.05.2024 அன்று அளிக்கப்பட்ட மேல்முறையீடு மனுவிற்கு 12.06.2024 அன்று RTI அதிகாரி வழங்கிய பதில் மனுவில் மண்டலம் 12ல் மொத்தம் 28 ஒட்டல்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக முகவரிகள் பட்டியலுடன் பதில் அளிக்கப்பட்டது. அதன்படி மனுதாரர் ஆகிய நான் ஒட்டல்களில் பார்கிங் உள்ளதா என்று நேரடியாக பார்வையிட்டேன். கதவு எண்.333, M.K.N.ரோடு, ஆலந்தூர் , சென்னை 16 என்ற முகவரியில் சுமார் 10,000 சதுரடியில் ஐந்து தளத்தில் Parking வசதிகள் இல்லாமல் ஒட்டல் இயங்கி வருவதை

புகைப்படம் எடுத்து இம்மனுவுடன் இணைத்துள்ளேன். இங்கு வரும் வாடிக்கையாளர்கள் வாகனங்களை சாலையில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் அனைத்து ஒட்டல்களுக்கும் போக்குவரத்து காவல் துறை NOC-பெறாமல் Licence-கள் வழங்கப்பட்டதும் தெரிய வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மாநகராட்சி ஆணையர் புதியதாக ஒட்டல் துவங்கினால் போக்குவரத்து காவல் துறை NOC-கட்டாயம் என்று பத்திரிக்கை செய்தி வெளியானது பார்க்கிங் வசதிகள் இல்லாத ஒட்டல்களை கண்டறிந்து Lock & Seal செய்ய உத்தரவளித்தார். இது போல் சட்டவிரோதமாக ஒட்டல்களுக்கு Licence-கள் வழங்கி வருவதால் சென்னையில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, ஐயா, அவர்கள் விதிமுறைகளை மீறி வழங்கிய Licence-களை ரத்து செய்து ஒட்டல்களை மூட உத்தரவிடக்கோரி மேல்முறையீட்டு பொதுநலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 15.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டும், அறிக்கை பெறப்படாததால் 02.04.2025 நாளிட்ட நினைவுட்டு கடிதம் அனுப்பப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர், மண்டலம் 12 அவர்களின் 22.04.2025 நாளிட்ட கடிதம் பெ.செ.மா.12.வ.து. ந.க.எண் ஆர்4/2274/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"புகார் மனு மீது சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உரிமையாளரிடம் புகார் மனு குறித்த உரிய விவரம் கோரப்பட்டது. திருவாளர்கள் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உரிமையாளர் தனது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதில் அளித்துள்ளார். அதன் விவரம்:-

"It is brought to your notice that a writ petition was filed numbered as W.P.No. 33821 of 2014 by one Mr. Ragu and Chennai Hotel Association was party to the said writ petition. After hearing the detailed arguments with regard to obtaining NOC from the Commissioner the Hon'ble Division Bench by order dated 27.7.2018 made it clear that NOC is not required for the hotelier who had already obtained trade License. Further the Hon'ble Bench made it clear that no action will be taken against the person who have valid trade license".

மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணை விவரம்:–

Admittedly, the above said provisions cannot be invoked A reading of the above mentioned Notice dated 23.07.2018 would make it very clear that no Hotel shall be permitted to run without obtaining "No Objection Certificate / Licence" from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act, 1888. Fresh establishments will have to obtain "No Objection Certificate" / Trade Licence and other certificate that are required by the Corporation. If Trade Licence had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued ".

சென்னை–16, ஆலந்தூர், எம்.கே.என் ரோடு, கதவு எண்.333ல் இயங்கி வரும் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருவதும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக 2017–18ஆம் ஆண்டு தொழில் உரிமம் பெற்று இருப்பதும், (கட்டண ரசீது எண்.2017–18/N12/0407619) இவ்வுணவகம் தரைத்தளத்தில் மட்டும் 500 சதுரடியில் இயங்கி வருவதும், மாண்புமிகு உயர்நீதி மன்ற ஆணைக்கு உட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி தொழில்

உரிமத்தை முறையாக புதுப்பித்து வருவதும் தெரிய வருகிறது. இருப்பினும் ஒட்டல் உரிமையாளரிடம் பொது மக்களுக்கு எவ்வித இடையூறு இன்றியும், போக்குவரத்துக்கு இடையூறு இன்றியும் செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.07.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக செயற்பாட்டாளர். பொது மக்களுக்கான பொதுப்பணிகளை சட்ட ரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருவதற்கான சான்றுகள் ஏராளமாக என்னிடம் உள்ளது. சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 12 எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2018–ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை வருவாய் துறை அதிகாரிகள் எத்தனை புதிய ஒட்டல்கள் துவங்க Licence-கள் வழங்கப்பட்டது. ஒட்டல் உரிமையாளர்கள் போக்குவரத்து காவல் துறையிடம் பெறப்பட்ட NOC-கள் சான்றிட்ட நகல்கள் கேட்டு கடந்த 11.03.2024 அன்று அளிக்கப்பட்ட RTI மனுவிற்கு 12.06.2024 அன்று RTI அதிகாரி வழங்கிய பதில் மனுவில் மண்டலம் 12–ல் மொத்தம் 28 ஒட்டல்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக முகவரிகள் பட்டியலுடன் பதில் அளிக்கப்பட்டது. கதவு எண்.333, M.K.N.ரோடு, ஆலந்தூர், சென்னை–16 என்ற முகவரியில் சுமார் 10,000 சதுரடியில் ஐந்து தளத்தில் Parking வசதிகள் இல்லாமல் ஒட்டல் இயங்கி வருவதை கண்டறியப்பட்டது. இங்கு வரும் வாடிக்கையாளர்கள் வாகனங்களை சாலையில் நிறுத்துவதோடு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் அனைத்து ஒட்டல்களுக்கும் போக்குவரத்து காவல் துறை NOC-பெறாமல் Licence-கள் வழங்கப்பட்டதும் தெரிய வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மாநகராட்சி ஆணையர் புதியதாக ஒட்டல் துவங்கினால் போக்குவரத்து காவல் துறை NOC-கட்டாயம் என்று பத்திரிக்கை செய்தி வெளியானது. பார்க்கிங் வசதிகள் இல்லாத ஒட்டல்களை கண்டறிந்து Lock & Seal செய்ய உத்தரவளித்தார். இது போல் சட்டவிரோதமாக ஒட்டல்களுக்கு Licence-கள் வழங்கி வருவதால் சென்னையில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, கட்டிட அனுமதியில்லாமலும், CMDA அனுமதியில்லாமலும், உரிய காவல்துறை NOC சான்றிதழ் இல்லாமலும், உரிய பார்க்கிங் வசதியில்லாமலும், கட்டிடத்திற்கு உரிய Completion Certificate இல்லாமலும் இயங்கும் சுக்குபாய் புட்ஸ் உணவகத்தை மூட உத்திரவிடுமாறு முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12–ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரர் புகார் மனு மீது சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உரிமையாளரிடம் புகார் மனு குறித்த உரிய விவரம் கோரப்பட்டது. திருவாளர்கள் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உரிமையாளர் தனது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதில் அளித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:-

"It is brought to your notice that a writ petition was numbered a W.P.No. 33821 of 2014 by one Mr. Ragu and Chennai Hotel Association

was party to the said writ petition. After hearing the detailed arguments with regard to obtaining NOC from the Commissioner the Hon'ble Division Bench by order dated 27.7.2018 made it clear that NOC is not required for the hotelier who had already obtained trade License. Further the Hon'ble Bench made it clear that no action will be taken against the person who have valid trade license".

<u>மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணை விவரம்:–</u>

Admittedly, the above said provisions cannot be invoked A reading of the above mentioned Notice dated 23.07.2018 would make it very clear that no Hotel shall be permitted to run without obtaining "No Objection Certificate / Licence" from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act,1888. Fresh establishments will have to obtain "No Objection Certificate" / Trade Licence and other certificate that are required by the Corporation. If Trade Licence had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued.

மேற்காணும் விவரங்கள் அடிப்படையில், சென்னை, ஆலந்தூர், எம்.கே.என் ரோடு, கதவு எண்.333ல் இயங்கி வரும் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருவதும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக 2017-18ஆம் ஆண்டு தொழில் உரிமம் பெற்று இருப்பதும், இவ்வுணவகம் தரைத்தளத்தில் மட்டும் 500 சதுரடியில் இயங்கி வருவதும், மாண்புமிகு உயர்நீதி மன்ற ஆணைக்கு உட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி தொழில் உரிமத்தை முறையாக புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட உணவகத்திற்கு தொழில் உரிமம் 2025 மார்ச் மாதம் பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உணவகத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்ற தகவல் உரிய துறையிடமிருந்து பெறப்பட்டு இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம். இது குறித்து விளக்கம் அளிக்க வேறொரு நாள் மற்றும் நேரம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இருப்பினும் ஓட்டல் உரிமையாளரிடம் பொது மக்களுக்கு எவ்வித இடையூறு இன்றியும், போக்குவரத்துக்கு இடையூறு இன்றியும் செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

7. மற்றொரு எதிர்மனுதாரர் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட்–உணவகத்தின் உரிமையாளரின் சார்பாக வழக்கறிஞர் திரு. M.தனுஷ் என்பவர் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.33821 of 2014 –ல் 27.07.2018 நாளிட்டு பின்வரும் தீர்ப்பினை வழங்கியுள்ளது: "It is brought to your notice that a writ petition was numbered as W.P.No. 33821 of 2014 by one Mr. Ragu and Chennai Hotel Association was party to the said writ petition. After hearing the detailed arguments with regard to obtaining NOC from the Commissioner the Hon'ble Division Bench by order dated 27.7.2018 made it clear that NOC is not required for the hotelier who had already obtained trade License. Further the Hon'ble

Bench made it clear that no action will be taken against the person who have valid trade license".

Admittedly, the above said provisions cannot be invoked A reading of the above mentioned Notice dated 23.07.2018 would make it very clear that no Hotel shall be permitted to run without obtaining "No Objection Certificate / Licence" from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act, 1888. Fresh establishments will have to obtain "No Objection Certificate" / Trade Licence and other certificate that are required by the Corporation. If Trade Licence had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued.

மேற்கண்ட உயர்நீதி மன்ற ஆணைக்குட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொழில் உரிமம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எனவே, எங்கள் உணவகத்தை பொறுத்தவரை எவ்வித விதி மீறலும் இல்லை என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மனுதாரர் புகார் குறித்து விரிவான விளக்கம் அளிக்க வேறொரு நாள் மற்றும் நேரம் வழங்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.''

**8.** பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **12–**ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் **22.07.2025** அன்று நடைபெற்ற விசாரணையின் போது தங்களுடைய வாக்குமூலத்தில் மேற்கண்ட உணவகத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்ற தகவல் உரிய துறையிடமிருந்து பெறப்பட்டு இம்முறை மன்றத்தில் விளக்கம் அளிக்க வேறொரு நாள் மற்றும் நேரம் வழங்குமாறும் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரர் சார்பாக ஆஜரான திரு. M. தனுஷ் என்பவரும் மனுதாரர் புகார் குறித்து விரிவான விளக்கம் அளிக்க வேறொரு நாள் மற்றும் நேரம் வழங்குமாறு கோரியிருந்ததால், மேற்கண்ட மனுதாரரின் மனு தொடர்பாக, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் **19.08.2025** அன்று நடைபெறும் நேரடி தொடர் விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**9.** மனுதாரர் 19.08.2025 அன்று நடைபெற்ற தொடர் விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"எனது மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் **22.07.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் என்னால் அளித்த வாக்குமூலத்தை தொடர்ந்து பின்வருமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்முறைமன்ற நடுவத்தில் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தெரிவித்த எனது புகார்களை மீண்டும் தற்போது வலியுறுத்தியும், மேற்கண்ட உணவகம் பார்க்கிங் வசதி மற்றும் போக்குவரத்து காவல் துறையின் NOCயும் பெறப்படாமல் இயங்குவதால், சுக்குபாய் புட்ஸ் பி.லிட் என்ற நிறுவனத்தின் மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

**10.** பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **12–**ன் வரி மதிப்பீட்டாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 19.08.2025 அன்று நடைபெற்ற தொடர் விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் அளித்த புகார் தொடர்பாக ஏற்கனவே 22.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் **12**ன்

அலுவலர்களால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தை தொடர்ந்து பின்வருமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

1) மனுதாரர் குறிப்பிட்ட Fire Service துறையிடமிருந்து NOC பெற வேண்டும் என்பதும் தொழிலாளர்களுக்கான பி.எப் பிடித்தம் செய்வது பெருநகர சென்னை மாநகராட்சி வரம்பிற்குள் இல்லை.

2) சென்னை–16ல் கதவு எண்.333ல் இயங்கி வரும் சுக்குபாய் புட்ஸ் பி.லிட் உணவகத்திற்கு பார்க்கிங் வசதியில்லை. மேலும் இது குறித்து மேற்கண்ட உணவக உரிமையாளருக்கு 16.04.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உணவக நிறுவனம் அதற்கு பதில் அளித்து உயர்நீதி மன்ற ஆணையின் நகலை சமர்ப்பித்துள்ளது என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

**11.** மற்றொரு எதிர்மனுதாரர் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட்–உணவகத்தின் உரிமையாளரின் சார்பாக வழக்கறிஞர் திரு. விஜயன் சுப்ரமணியன் என்பவர் **19.08.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.33821 of 2014–ல் 27.07.2018 நாளிட்டு பின்வரும் தீர்ப்பினை வழங்கியுள்ளது:

> "It is brought to your notice that a writ petition was numbered as W.P.No. 33821 of 2014 by one Mr. Ragu and Chennai Hotel Association was party to the said writ petition. After hearing the detailed arguments with regard to obtaining NOC from the Commissioner the Hon'ble Division Bench by order dated 27.7.2018 made it clear that NOC is not required for the hotelier who had already obtained trade License. Further the Hon'ble Bench made it clear that no action will be taken against the person who have valid trade license".
>
> Admittedly, the above said provisions cannot be invoked. A reading of the above mentioned Notice dated 23.07.2018 would make it very clear that no Hotel shall be permitted to run without obtaining "No Objection Certificate / Licence" from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act, 1888. Fresh establishments will have to obtain "No Objection Certificate" / Trade Licence and other certificate that are required by the Corporation. If Trade Licence had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued."

மேலும் சுக்குபாய் புட்ஸ் பி.லிட் உணவகத்தின் உரிமையாளர் ஏற்கனவே 2017ல் Trade Licence பெறப்பட்ட நிலையில் மேற்கண்ட நீதிமன்ற ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரின் No Objection Certificate தேவையில்லை என்று இம்முறைமன்ற நடுவர் முன் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட உயர்நீதி மன்ற ஆணையில் பார்க்கிங் வசதி குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளது.

"This court also makes it very clear that if a Eating House, Boarding House, Lodging House etc., (Which has a valid Trade Licence) permits parking other than the place demarcated, then, it is open to the Police Authorities to tow the vehicles. The Hotels are directed to display sign boards outside the hotels indicating No parking and vehicles shall be towed by the police in case of any violation."

மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண். W.P.No. 33821 / 2014ல் 27.07.2018ல் வழங்கிய தீர்ப்பின் நகல், Trade Licence, FSSI, Fire Licence, மற்றும் Labour Licence ஆகியவற்றின் நகல்களை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.''

12. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரர்–சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட்–ன் சார்பாக வழக்கறிஞர்கள் அளித்த வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

"சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 12–ல் கதவு எண்.333, M.K.N.ரோடு, ஆலந்தூர் , சென்னை 16 என்ற முகவரியில் சுமார் 10,000 சதுரடியில் ஐந்து தளத்தில் Parking வசதிகள் இல்லாமல் ஒட்டல் இயங்கி வருகிறது என்பதும், இங்கு வரும் வாடிக்கையாளர்கள் வாகனங்களை சாலையில் நிறுத்துவதோடு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்பதும், கட்டிட அனுமதியில்லாமலும், CMDA அனுமதியில்லாமலும், உரிய காவல்துறை NOC சான்றிதழ் இல்லாமலும், உரிய பார்க்கிங் வசதியில்லாமலும், கட்டிடத்திற்கு உரிய Completion Certificate இல்லாமலும் இயங்கும் சுக்குபாய் புட்ஸ் உணவகத்தை மூட (Lock and seal) உத்திரவிடுமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

சென்னை, ஆலந்தூர், எம்.கே.என் ரோடு, கதவு எண்.333ல் இயங்கி வரும் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருவதும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக 2017–18ஆம் ஆண்டு தொழில் உரிமம் பெற்று இருப்பதும், இவ்வுணவகம் தரைத்தளத்தில் மட்டும் 500 சதுரடியில் இயங்கி வருவதும், மாண்பமை உயர்நீதி மன்ற ஆணைக்கு உட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி தொழில் உரிமத்தை முறையாக புதுப்பிக்கப்பட்டு வருகிறது என்பதும், தொழில் உரிமம் 2025 மார்ச் மாதம் வரை பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் குறிப்பிட்ட Fire Service துறையின் NOC, தொழிலாளர்களுக்கான பி.எப் பிடித்தம் செய்வது பெருநகர சென்னை மாநகராட்சி வரம்பிற்குள் இல்லை என்பதும், பார்க்கிங் வசதி குறித்து மேற்கண்ட உணவக உரிமையாளருக்கு 16.04.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டதும், மேலும், Licence குறித்து சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.33821 of 2014 நாள் 27.07.2018–ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டதும்,

"5. Admittedly, the above said provisions cannot be invoked. A reading of the above mentioned Notice dated 23.07.2018 would make it very clear that no Hotel shall be permitted to run without obtaining "No Objection Certificate / Licence" from the Commissioner for the first time under the relevant provisions of Chennai City Police Act, 1888. Fresh establishments will have to obtain "No Objection Certificate"/Trade

Licence and other certificates that are required by the Corporation. If Trade Licence had already been obtained for eating house, boarding house, lodging house and the same is already in existence, no notice like the present one dated 23.07.2018 can be issued.".

மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில் சுக்குபாய் புட்ஸ் பி.லிட் உணவகத்தின் உரிமையாளர் ஏற்கனவே 2017ல் Trade Licence பெறப்பட்டுள்ளதும், எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரின் No Objection Certificate தேவையில்லை என்பதும், மேலும் மாண்பமை உயர்நீதி மன்றத்தின் மேற்கண்ட ஆணையில் பார்க்கிங் வசதி குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளது,

"6. xxx xxx xxx. This court also makes it very clear that if a Eating House, Boarding House, Lodging House, etc., (which has a valid trade licence) permits parking other than the place demarcated, then, it is open to the police authorities to tow the vehicles. The Hotels are directed to display Sign Boards outside the Hotels indicating "No parking" and "vehicles shall be towed by the Police in case of any violation.".

என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர், உரிமம் ஆய்வாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக, சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் உணவகத்தின் உரிமையாளர் ஏற்கனவே 2017ல் Trade Licence பெறப்பட்ட நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.33821 of 2014 நாள் 27.07.2018 வெளியிடப்பட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரின் No Objection Certificate தேவையில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்திருப்பதும், மேற்கண்ட உயர்நீதி மன்ற ஆணையில் பார்க்கிங் வசதி குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதும், சுக்குபாய் உணவகம் உரிமையாளரின் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை, ஆலந்தூர், எம்.கே.என் ரோடு, கதவு எண்.333ல் இயங்கி வரும் சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக 2017–18ஆம் ஆண்டு தொழில் உரிமம் பெற்று செயல்பட்டு வருவதும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஆணைக்கு உட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி தொழில் உரிமம் முறையாக புதுப்பிக்கப்படுகிறது என்றும், சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.33821 of 2014 நாள் 27.07.2018–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, ஏற்கனவே 2017ல் Trade Licence பெறப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரின் No Objection Certificate தேவையில்லை என்பதும், மேற்கண்ட உணவகத்திற்கு பார்க்கிங் வசதி குறித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 27.07.2018 நாளிட்ட ஆணையில்,

"xxx xxx

6. In view of the fact that the issuance of Notice dated 23.07.2018 applies to only new establishments, the said establishments will have to adhere to the provisions of Law in its Letter and Spirit. This court also makes it very clear that if a Eating House, Boarding House, Lodging House etc., (which has a valid trade licence) permits parking other than the place demarcated, then, it is open to the police authorities to tow the vehicles. The Hotels are directed to display Sign Boards outside the Hotels indicating "No parking" and "vehicles shall be towed by the Police in case of any violation.".

xxx xxx"

என ஆணையிட்டுட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, மனுதாரரின் மனு மீது மேல் நடவடிக்கை எடுப்பதற்கான அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மாவட்ட வருவாய் அலுவலர் /
மண்டல அலுவலர்,
மண்டலம் 12,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) திரு. A.அலி,
உரிமையாளர்,
சுக்குபாய் புட்ஸ் பிரைவேட் லிமிடெட்,
கதவு எண் 333, M.K.N. ரோடு,
சென்னை–600 016.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

23/9/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032